செய்தி வெளியீடு எண். 22-2018 நாள்: 14.05.2018

**விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் 23.05.2018 அன்று முதல் 1427-ம் பசலிக்குரிய வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

******

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும், 23.05.2018 அன்று முதல் 1427-ம் பசலிக்குரிய வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படி, விழுப்புரம் மாவட்டத்தில் அனைத்து வட்டங்களுக்கும் வருவாய் தீர்வாய அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மலையனூர் வட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், கண்டாச்சிபுரம் வட்டத்திற்கு மாட்ட வருவாய் அலுவலர் அவர்களும், விழுப்புரம் வட்டத்திற்கு தனித்துணை ஆட்சியர் (ஆர்பிடேஷன்) அவர்களும், விக்கிரவாண்டி வட்டத்திற்கு விழுப்புரம் உதவி ஆணையர் (கலால்) அவர்களும், வானூர் வட்டத்திற்கு விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களும், திண்டிவனம் வட்டத்திற்கு மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களும், செஞ்சி வட்டத்திற்கு திண்டிவனம் சார் ஆட்சியர் அவர்களும், மரக்காணம் வட்டத்திற்கு திண்டிவனம் தனித்துணை ஆட்சியர் (சிப்காட்) அவர்களும், திருக்கோவிலூர் வட்டத்திற்கு திருக்கோவிலூர் சார் ஆட்சியர் அவர்களும், உளுந்தூர்பேட்டை வட்டத்திற்கு மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அவர்களும், கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அவர்களும், சங்கராபுரம் வட்டத்திற்கு கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாட்சியர் அவர்களும், சின்னசேலம் வட்டத்திற்கு மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களும் வருவாய் தீர்வாய அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் 23.05.2018-ந்தேதி முதல் 1427-ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் நடைபெற உள்ள நாட்களில் தினமும் காலை 10.00 மணிக்கு வருவாய் தீர்வாயம் ஆரம்பமாகும். வருவாய் தீர்வாய நாட்களில் வருவாய் தீர்வாய அலுவலரிடம் நேரில் மனு கொடுக்க விரும்பும் கிராம மக்கள் அவரவர் கிராம தீர்வாயம் நடைபெறும் நாட்களில் தங்கள் குறைகளை குறிப்பிட்டு மனுக்களை தரலாம். வருவாய் தீர்வாய மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். வருவாய் தீர்வாய நிறைவு நாளன்று மாலையில் கிராம குடிமக்கள் கூட்டம் நடத்தப்படும். பொதுமக்கள் வருவாய் தீர்வாயத்தில் மனுக்களை அளித்து பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.